DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No. 42/2020
Prosecution witness – P.W.1

| | | |
|---|---|---|
| Name | : **திரு**.ஜமால் முகம்மது | Caste: |
| Father's Name | : **முகம்மது ஆரிப்** | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

13.05.2025 –03.15 PM

**1ம் எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–**

1. முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவமானது 06.45 மணிக்கு நடந்ததாகவும், 06.55 மணியளவில் எதிரிகளை கைப்பற்றப்பட்ட தடயத்துடன் காவல்நிலையம் அழைத்துச் சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் 25 நிமிடங்கள் வரை இருந்தேன். வழக்குப் புகாரை என் கைப்பட எழுதிக் கொடுத்தேன். தட்டச்சு செய்யப்பட்ட புகாரை கொடுக்கவில்லை என்றால் சரியாக நினைவில் இல்லை. ஆனால் கைப்பட தான் புகாரை எழுதிக் கொடுத்தேன். பறக்கும் படைக்கு என்று ஒதுக்கப்பட்ட ஒரு வாகனத்தில் எதிரிகளையும், தடயங்களையும் எடுத்துச் சென்றோம்.

2. அன்றைய தினம் வாகனத்தில் இடம் இல்லாததல் இரு காவலர்களை சம்பவ இடத்திலேயே விட்டுவிட்டு சார்பு ஆய்வாளர் செல்வக்குமார், நான், எதிரிகள், மற்றொரு காவலர் வீரமணி ஆகியோருடன் தடயங்களையும் எடுத்துச் சென்றோம். இந்த விபரங்களை போலீஸ் விசாரணையின் போது கூறவில்லை. சம்பவ இடமானது அருப்புக்கோட்டை செல்லக்கூடிய பிரதான சாலை என்றால் சரிதான். அங்கு போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே கடைகள் எதுவும் இல்லை. சம்பவ இடத்திற்கு எதிர் திசையில் கமுதி அரசு மருத்துவமனை அமைந்துள்ளது.

3. தர்மலிங்கத்தேவர் என்பவரது காம்பவுண்ட் வேலி அமைந்துள்ள இடத்திற்கு வடக்கே ஆறு அமைந்துள்ள இடத்தின் அருகில் இருந்து

எதிரிகளை பிடித்தோம். நான் சொல்லக்கூடிய சம்பவ இடம் ஆறு என்றால் சரிதான். ஆனால் நான் பார்த்த போது தண்ணீர் இல்லாமல் தரையாக இருந்தது. அந்த இடத்திற்குள் வாகனங்கள் செல்ல இயலாது என்றால் சரிதான். எவ்வாறு சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் நாங்கள் சென்ற ஜீப்பை அரசு மருத்துவமனைக்கு எதிர் திசையில் மெயின் ரோட்டில் நிறுத்திவிட்டு சம்பவ இடத்திற்கு நடந்து சென்றோம்.

4. அங்கிருந்து எவ்வாறு வாகனத்தில் கைப்பற்றப்பட்ட தடயங்களை ஏற்றினோம் என்றால் காவலர்கள் உதவியோடு ஏற்றினோம். நானும், என்னுடன் வந்த காவலர்களும் மதுபாட்டில்கள் அடங்கிய பெட்டிகளை கைகளில் தூக்கி வந்து வாகனத்தில் ஏற்றினோம். நாங்கள் பெட்டிகளை ஒவ்வொன்றாக தூக்கி வந்து வாகனத்தில் ஏற்றும் வரை எதிரிகள் எங்கிருந்தார்கள் என்றால் அவர்களும் எங்களுக்கு உதவியாக பெட்டிகளை தூக்கி வந்து வாகனத்தில் ஏற்றினார்கள். நான் கூறியபடி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் பெட்டியை தூக்கி வந்து வாகனத்தில் ஏற்ற வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

5. எதிரிகள் அன்றைய தினம் எங்களைப் பார்த்தவுடன் பதற்றத்தில் அங்கும் இங்கும் சென்றதால் நான் எதிரிகள் மீது சந்தேகப்பட்டேன். எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் எங்களைக் கண்டதும் தப்பி ஓட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரிகள் அன்றைய தினம் தப்பி ஓடவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கு சொந்த ஊர் முத்துப்பட்டி கிராமம். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள குடியிருப்பில் வசிப்பவர்களை சார்பு ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் இல்லை, நானும் விசாரிக்கவில்லை. எதிரிகளிடம் கேட்ட போது அவர்கள் வைத்திருப்பதாக கூறினார்கள்.

6. இது சம்மந்தமாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளித்தேனா என்றால் எதிரிகளை தடயங்களுடன் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு பின்னர் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அளித்தேன். நான் புகார் அளிக்கும் வரை காவல்நிலையத்தில் இருந்து எந்த அதிகாரியும் சம்பவ இடத்திற்கு வரவில்லை

என்றால் சரிதான். என்னுடன் போலீசார் உடனிருந்ததால் நான் காவல்நிலையத்திற்கு தகவல் அளிக்கவில்லை. கமுதி மற்றும் முதுகுளத்தூர் பகுதியில் எனக்கு ரோந்து பணி ஒதுக்கப்பட்டது. சம்பவதினத்தன்று மதியம் 02.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரையில் கமுதியில் ரோந்து பணி மேற்கொண்டேன்.

7. அன்றைய தினம் கமுதியில் பல்வேறு இடங்களுக்கு ரோந்து சென்றோம். அன்றைய தினம் வேறு வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக புகார் அளிக்க சென்றபோது சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். காவல்நிலையத்தில் வைத்து புகாரை எழுதிக் கொடுத்தேன். காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கூறிதான் எதிரிகளின் பெயரைத் தெரிந்து கொண்டேன். தேர்தல் சமயத்தில் விதிமுறைகளை மீறி குற்ற சம்பவம் நடைபெற்றால் அதை வீடியோ பதிவு செய்வதற்காக ஒரு புகைப்படக்கலைஞர் நியமிக்கப்பட்டிருப்பார் என்றால் சரிதான். இவ்வழக்கைப் பொறுத்தவரை எதிரிகளை தடயங்களுடன் பார்த்தற்கோ, அவர்களிடமிருந்து தடயங்கள் கைப்பற்றப்பட்டதையோ வீடியோ பதிவோ, புகைப்படமோ எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது உண்மையாக இருந்திருந்தால் உரிய முறையில் சம்பவத்தை வீடியோ பதிவு செய்து தடயங்கள் கைப்பற்றப்பட்டிருந்ததை வீடியோ பதிவு செய்து எனது புகாருடன் வீடியோ பதிவுகளையும் இணைத்து போலீசாரிடம் கொடுத்திருப்பேன் என்றாலும், நான் கூறுவது பொய் என்பதால் தான் அவ்வாறு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

8. தட்டச்சு செய்யப்பட்ட புகார் சம்மந்தமாக வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தால் போலீசார் நான் கைப்பட எழுதிக் கொடுத்த புகாரை மாற்றியுள்ளார்கள் என எடுத்துக் கொள்ளலாமா என்றால் போலீசார் ஒருவேளை நான் கைப்பட எழுதிய புகாரை தட்டச்சு செய்திருக்காலம் அப்படியென்றால் நான் இரு புகார்களை அளித்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. நான் வழக்கு சம்மந்தமாக புகார் அளித்திருந்தால் எனக்கு நினைவில் இருந்திருக்கும் என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்து

கொடுத்துவிட்டு பொய் சாட்சியம்அளிப்பதால் தான் நினைவில் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கூறிய படி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது போடப்பட்ட வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.13 16:13:20 +0530